செ.வெ.எண்.74 நாள்.07.02.2018.

**திருநெல்வேலி அருள்தரும் காந்திமதி அம்பாள் அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் திருக்கோவிலில் நடைபெற்று வரும் தூய்மை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் ISRO-IPRC இணைந்து தூய்மை இந்தியா திட்டம் (SWACHHTA PAKHWADA) கீழ் அருள்தரும் காந்திமதி அம்பாள் அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் திருக்கோவில்களில் தூய்மை பணிகள் இன்று (07.02.2018) நடைபெற்றது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வுக்குப் பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில், அருள்தரும் காந்திமதி அம்பாள் அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் திருக்கோவில்களில் ISRO-IPRC இணைந்து தூய்மை பணிகளை இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறார்கள். இவர்களுடன் இணைந்து சுமைல் பவுண்டேசன் நிறுவன உதவியுடன் திருக்கோவிலில் அமைந்துள்ள சிலைகள் மற்றும் ஆலயத்தினை சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கோவிலில் உள்ள ஆறு மண்டபங்களும் தூய்மைப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுபோன்று திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து திருக்கோவில்களும் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்து சமய அறநிலையத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்கோவில்களில் தீ தடுப்பு சாதனங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள், உள்கட்டமைப்புகள் தொடர்பான பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ISRO தலைமை பொறியாளர் திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் 60 நபர்களும், சுமைல் பவுண்டேசன் நிறுவனத்தின் சார்பாக 20 நபர்களும், சமூக ஆர்வர்கள் என மொத்தம் 100க்கும் மேற்பட்டோர் தூய்மை பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆய்வின் போது, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.பரஞ்சோதி, திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.கணேசன், அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் கோவில் செயல் அலுவலர் திருமதி.ரோஷினி, ISRO-IPRC அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.